பாரிஸ் நகரில்

# சபாலிங்கம் அவர்கள் படுகொலை

## மாற்றுக் கருத்துக்களுக்கு படுகொலை தீர்வாகாது



விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் எழுபதுகளின் ஆரம்பத்தில் முனைப்புடன் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்களின் உந்து சக்திகளில் ஒருவரும், எழுத்தாளரும், வெளியீட்டாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பாரீஸ் நகரில் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மே மாதம் 1ம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் துப்பாக்கிகளுடன் அவரது வீட்டிற்குள் நுழைந்த இரண்டு தமிழர்கள் அவரது மனைவி, குழந்தையின் முன்னிலையில் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தபின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசம் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்துத் தலைமறைவாகிவிட்டனர்.

1970 களில் விடுதலைக்காக போராட்டத்தில் இறங்கிய தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகள் என்ற போர்வையில் சிறீலங்கா அரசு கைதுசெய்த வேளையில் சபாலிங்கம் பாலம் ஒன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிடப்பட்டார். மாடிச் சிறையிலிருந்து தப்பியோடும் போது நாரியில் முறிவேற்பட்டு 5 வருடங்கள் சிறீலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்கு தலைமறைவாக வாழ்ந்த அவர், அதன்பின் பிரான்ஸ் வந்து சேர்ந்தார்.

புலம் பெயர்ந்து பாரிஸில் வாழ்ந்து வந்த சபாலிங்கம் மனித நேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவராகவும், ஈழத்து கலை இலக்கியங்களின் பதிப்பாளராகவும் இருந்து வந்தார். ASSEAY (ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம்) எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராக இருந்து, சமகால கவிஞர்களான வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளையும், தாரகி அவர்களின் "Eluding Peace" ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பத்தி எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார். மேலும் 'புத்தளம் முஸ்லிம் மக்கள் வரலாறு' , இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் 'புதியதோர் உலகம்', இலங்கையில் தடைசெய்யப்பட்ட 1958 கலவரத்தைப் பற்றிய தாச்சிவித்தாச்சி அவர்களின் 'Emergency 58', மற்றும் 'யாழ்ப்பாண வைபவ மாலை' போன்ற நூல்கள் மீண்டும் வடிவம்பெற உழைத்திருக்கின்றார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக் கொண்டார்.

மாற்றுக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் துப்பாக்கிக் குண்டுகள் மூலம் அழித்தொழித்து வருகின்ற இயக்க பாரம்பரியத்தில் மற்றெல்லோரையும் விட முன்னணியில் இருந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளே சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்குப் பொறுப்பானவர்கள் என்று நாம் கருதுகின்றோம். பாரீஸ் நகரில் இருக்கும் விடுதலைப் புலிகளின்

தலைவர்களில் ஒருவரான லோரன்ஸ் திலகர், சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று மறுத்திருந்த போதிலும் அதனை ஏற்றுக் கொள்வதில் எங்களுக்கு மிகுந்த சந்தேகம் உண்டு. அனுராதபுரம் சிங்கள மக்கள் படுகொலை, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலை, கிழக்கு முஸ்லீம்களின் படுகொலை போன்ற பல சம்பவங்களுக்கு தாம் பொறுப்பாளிகளல்ல என்று அறிக்கை விட்டு, பின்னர் மெல்ல மெல்ல உண்மையை வெளிப்படுத்தல் என்பது விடுதலைப் புலிகளின் வரலாற்றில் உள்ளார்ந்து காணக்கிடக்கிறது.

மாற்றுக் கருத்துள்ளவர்களை அழித்தொழிப்பதை இலங்கையிலும், இந்தியாவிலும் மட்டுமே இதுவரை மேற்கொண்டிருந்தவர்கள் இன்று ஐரோப்பாவிலும் தமது படுகொலைகளை ஆரம்பித்திருப்பது சர்வதேச அரங்கில் விடுதலைப் போராட்டத்தின் நலன்களுக்கு மிகுந்த பாதகமாக அமையுமென்பது அனைவருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் போராட்ட நலன்களுக்கு மேலாக சொந்த இயக்க நலன்களை முதன்மைப்படுத்துவது, ஒட்டுமொத்தமாக தமிழ்பேசும் மக்களின் எல்லாவகையான சுதந்திரத்தையும் புதைகுழியில் தள்ளுவதாகும். இது மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது மட்டுமல்லாது வெறுக்கப்பட வேண்டியதுமாகும்.

விடுதலைப் போராட்டத்தையும், மானிட விழுமியங்களையும் நேசித்து இரண்டையும் இணைத்து இயங்கி வந்த ராஜினி திரணகம போன்ற புத்திஜீவிகளின் படுகொலையின் வரிசையிலேயே இன்று சபாலிங்கம் அவர்களின் படுகொலையும் நிகழ்ந்துள்ளது. ராஜினி, சபாலிங்கம் போன்றோர்கள் தனிமனிதர்களாக இயங்கி வந்த போதும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளுக்கும் சர்வதேச அளவில் கிடைத்து வந்த அங்கீகாரமே கொலையாளிகளை பீதியுறப்பண்ணியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த சபாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றை கூறும் 'யாழ்ப்பாண வைபவ மாலை' என்னும் நூலின் புதிய பதிப்பொன்றை வெளியிட்டிருந்தார். தமிழ் பேசும் மக்கள் தொடர்பான தொல்லியல் ஆவணங்களையும் வரலாற்று நூல்களையும் தொடர்ந்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். 70 களிலிருந்து இன்று வரையான விடுதலைப் போராட்ட வரலாற்றை தகவல்களுடனும், வாக்குமூலங்களுடனும்,

புகைப்படங்களுடனும் ஆவணப்படுத்தும் பெரும் முயற்சியின் இறுதிக்கட்டத்தில் சபாலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமை பலத்த சந்தேகத்தினை எழுப்புகின்றது. கடந்த காலப் போராட்டத்தில் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்துவிடுமென கொலையாளிகள் அச்சமுற்றிருந்தனர்.

இத்தகைய படுகொலைகளுக்கு எதிராக உலகமெங்கும் குரல் எழுப்பப்பட வேண்டுமென்பது மிகவும் குறைந்த பட்சத் தேவையாகும். எதிர்காலத்தில் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்காக தீவிரமாக உழைப்பதே விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரதும் கடமையாக இருக்க வேண்டும்.

மாற்றுக் கருத்துக்களை துப்பாக்கிக் குண்டுகளால் அழித்து விடலாம் என்று நம்புபவர்கள் வரலாற்றுக் குருடர்கள் மட்டுமே ஆவர். சபாலிங்கம் அவர்களின் பணியை இன்னும் ஒருபடி மேலெடுத்து செல்ல உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

***

இவ் அராஜகத்துக்கெதிராகக் குரல் கொடுக்கும் புலம்பெயர்ந்த சஞ்சிகைகளும் மனித உரிமை அமைப்புக்களும்

மனிதம் (சுவிஸ்)
சமர் (பிரான்ஸ்)
தூண்டில் (ஜேர்மனி)
சிந்தனை (ஜேர்மனி)
தேனீ (ஜேர்மனி)
ஊதா (ஜேர்மனி)
சுவடுகள் (நோர்வே)
சுமைகள் (நோர்வே)

தாகம் (லண்டன்)
ஈழபூமி (லண்டன்)
தேடல் (கனடா)
தாயகம் (கனடா)
காலம் (கனடா)
நான்காவது பரிமாணம் (கனடா)
விழிப்பு (கனடா)
கிரிய குரல் (கனடா)

Tamil Resource Centre (Canada)
Srilankans for Human Rights (Canada)
Campaign for Democracy in Sri Lanka (Canada)
South Asien Solidarity Committee (Germany)
Interculture Media Point (Grenzenlos-Germany)